## சிறைக் கைதிகள் நலன்புரி நிதியம் - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சிறைச்சாலைகள் திணைக்கள சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் நிலையான சொத்துக்கள் மற்றும் இலவசமாக அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் உள்ள உடைந்த பொருட்கள் இனங்காணப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதிகளை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுகர்வுப் பொருட்கள் கணக்கெடுக்கப்படுகையில் குறிப்பிடத்தக்க அளவான பொருட்கள் நிலையான சொத்துக்களாகக் கருதப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக இலவசமான அன்பளிப்புச் சொத்தாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 21,430,257 தொகையான மீதியில் உள்ளபடியான நிலையான சொத்துக்களின் அளவு நிச்சயிக்கப்பட முடியாதிருந்ததுடன் ஒரு வருடத்திற்குள் ஒரே விதமான பெறுமானத்தேய்வுக் கொள்கை பின்பற்றப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**(இ) நன்கொடை சொத்துக்கள் கணக்கிடப்படாமை**

வெலிகடை மகளிர் பிரிவு, கொழும்பு ரிமான்ட், புதிய மகஸின், வீரவில, வாரியபொல மற்றும் யாழ்ப்பாணம் போன்ற சிறைச்சாலைகளுக்காக 2011 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைச் சொத்துக்கள் கணக்கிடப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதற்கிடையில் ரூபா 495,850 பெறுமதியான நன்கொடைச் சொத்துக்கள் மற்றும் பெறுமதி கணிப்பிடப்படாத சொத்துக்கள் பெருமளவில் இருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் வதுபிடிவல சிறைச்சாலை 1997 இன் பின்னர் அகற்றப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியின் போதும் அந் நிறுவகத்தின் ரூபா 28,799 தொகையான நன்கொடைச் சொத்துக்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ii) வெலிகட மகளிர் பிரிவிற்காக பல வருட காலமாக அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த நூலகப் புத்தகங்கள் பல எண்ணிக்கையினதான போதிலும் அவை பெறுவனவுப் பேரேட்டில் உள்ளடக்கப்பட்டு பெறுமதியினைக் கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல சிறைச்சாலைகளின் சிறைக்கைதிகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 39,988 தொகையான அன்பளிப்புகளுக்கான செலவினங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

சிறைக்கைதிகளின் ஊதியங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கட்டாய அறவீடுகள் கணக்கிலும் சிறைக்கைதிகளின் உழைப்பை வழங்கி வேறு திணைக்களங்களில் இருந்து அறவிடப்பட்ட பணம் கணக்கிலும், நிலுவையாகக்

காணப்பட்ட மீதியில் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அளவும் முன்னைய ஆண்டிற்காக மேலும் நிலுவை மீதிகள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாகவும் பரீட்சிப்பதற்காக போதிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 699,262 தொகையான பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 958,030 ஆனமையால் நிதிசார் விளைவுகளின் ரூபா 258,768 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கான வருமானம் ரூபா 193,737 ஆலும் ஆன்மீக மற்றும் சமயரீதியான செலவினங்கள், கல்வி மற்றும் நலன்புரிச் செலவினங்கள் மற்றும் நிலையான சொத்துப் பெறுமானத்தேய்வு முறையே ரூபா 6,297 ஆலும் ரூபா 117,277 ஆலும் ரூபா 37,548 ஆலும் அதிகரித்ததுடன் விளையாட்டு மற்றும் ஏனைய வசதிகள் செலவினம், பரிசுப் பணச் செலவினங்கள் மற்றும் பின் பொறுப்பு சேவை நடவடிக்கை செலவினங்கள் முறையே ரூபா 91,730 ஆலும் ரூபா 124,423 ஆலும் ரூபா 10,000 ஆலும் குறைவடைந்தமையும் மேற்குறித்த நிதிசார் விளைவின் அதிகரிப்பிற்குக் காரணமாகியிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்கள சிறைக்கைதிகள் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தில் செலவில் உள்ள பணம் பின்வரும் செயற்பாடுகளுக்காக செலவிடப்படுவதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது.

(அ) சிறைக்கைதிகளின் ஆன்மீக மற்றும் சமயரீதியானதுமான நலன்கள்

(ஆ) சிறைக்கைதிகளின் கல்வி மற்றும் நலன்புரி

(இ) சிறைக்கைதிகளிற்காக வினோத விளையாட்டு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்

(ஈ) சிறைக்கைதிகளுக்குப் பரிசு வழங்குதல்

(உ) கண்காட்சிகள் ஒழுங்குபடுத்தல் மற்றும் சிறைக்கைதிகளுக்கான சிற்றுண்டிச் சாலைகள் பேணப்படுவதற்காக முற்பணங்கள் செலுத்துதல்.

மேற்குறித்த குறிக்கோள்களை எய்துவதற்காக 2011 ஆம் ஆண்டின் போது குறித்த இலக்கின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய ஒரு திட்டம் இன்றி சிறைக்கைதிகள் நலன்புரி நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகளுக்காக ரூபா 2,231,000 தொகையான பணம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் சிறைக்கைதிகள் நலன்புரி நடவடிக்கைகளுக்காக உள்ளபடியாக ஏற்கப்பட்டிருந்த செலவினம் ரூபா 1,547,653 ஆகக் காணப்பட்டது.

வளப் பகிர்வாளர்களின் உதவியுடன் பல்வேறு செயற்திட்டங்கள் அமுற்படுத்தப்படுவதும், கல்வி அமைச்சின் முறைசாரா கல்விப் பிரிவு, சுகாதார அமைச்சின் எச்.ஐ.வீ. பிரிவு, அபாயகர ஔவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் பிரதேச உப குழு ஆகியவற்றின் ஈடுபாட்டுடனான பங்களிப்புடன் சிறைச்சாலை நிறுவகங்களின் சிறைக்கைதிகள் நலன்புரி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு அனுசரணை பெறுதல் இச் செலவினங்கள் குறைவடைவதற்குக் காரணமாக இருந்தமையும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் செயற்பாடுகளுக்குரிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தலுபொத்த, களுத்துறை, யாழ்ப்பாணம், தல்தென, மட்டக்களப்பு, புஸ்ஸ, பொலொன்னறுவை, பதுளை சிறைச்சாலைகளில் மதிப்பிடப்பட்டிருந்த பெறுவனவுகள் ரூபா 488,250 ஆன போதிலும் உள்ளபடியாக பெறப்பட்டிருந்த தொகை ரூபா 44,848 ஆனமையால் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 9.17 சதவீதமே உள்ளபடியாகப் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் மதிப்பிடப்பட்டிருந்த வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 5.58 சதவீதம் முதல் 1861.31 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 46.98 சதவீதம் மற்றும் 136.14 சதவீதமான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) அன்பளிப்புச் சொத்துக்கள்
(ஈ) சிறைக் கைதிகள் நலன்புரி